**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE,**
**DINDIGUL.**
**S.C. 20/2025**
**Prosecution Witness : 1**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| **Name** | : | திரு. பரமசிவம் | **Caste** | : | |
| **Father's Name** | : | திரு. முத்தையா | **Calling** | : | விவசாயம் |
| **Village** | : | பாறைப்பட்டி | **Religion** | : | இந்து |
| **District** | : | திண்டுக்கல் | **Age** | : | **61** |
| | | | **Dated** | : | **20.01.2026** |

இந்திய பிரமாண வகைமுறைச் சட்டம் 1969 ( பிரிவு 4)ன்படி சாட்சிக்கு சத்தியப் பிரமாணம் செய்யப்பட்டு பிரமாணத்தின் பேரில் சாட்சியின் வாக்குமூலம் பதிவு செய்யப் பட்டது

---

**4 மற்றும் 5எதிரிகள் ஆஜர். 3-ம் எதிரி ஆஜரில்லை, பிரிவு 355 BNSS-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.**

அ.சா. 1 (பட்டியல் சாட்சி 1), **திரு. பரமசிவம்** ஆஜர். சத்தியப்பிரமாணம் செய்து வைக்கப்பட்டு விசாரணை செய்யப்படுகிறார்.

**முதல் விசாரணை :-**

நான் மேற்கண்ட முகவரியில் குடியிருந்து விவசாய வேலை செய்து வருகிறேன். சுமார் 11 ஆண்டுகளுக்கு முன்பாக போலீசார் பாறைப்பட்டிக்கு வந்து, படம் வரைந்தார்கள். அதற்காக என்னிடம் கையொப்பம் கேட்டார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். **மேற்படி பார்வை மகஜர் அ.சா.ஆ. 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** நான் கையொப்பம் செய்து கொடுத்தேன். போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

**3 மற்றும் 4 -வது எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை:-**

நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதப்பட்டு இருந்தது என்று எனக்கு தெரியாது. என்ன வழக்கிற்காக என்னிடம் கையொப்பம் வாங்கினார்கள் என்றும் எனக்குத் தெரியாது. போலீசார் கேட்டுக் கொண்டதற்கு இணங்க எழுதாத வெள்ளைத்தாளில் கையொப்பம் செய்து கொடுத்தேன் என்றால் சரிதான். நான் முதல் விசாரணையில் சொன்னது போல போலீசார் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு வரவில்லை என்றும், தற்போது போலீசார் கேட்டுக் கொண்டதன் பேரில் நீதிமன்றத்தில் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**5 -வது எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-**

3 மற்றும் 4 -வது எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணையை தம்முடையதாக ஏற்றுக்கொள்ளப்படுகிறது.

Taken down by me/before me in open court on 20.01.2026 and read over to the witness in the presence of counsel interpreted to him/her in Tamil and admitted by him/her to be correct.

V DEEPA

Digitally signed by V DEEPA
Date: 2026.01.20 15:20:03 +0530

Chief Judicial Magistrate,
Dindigul.